**கவனிக்க.**- *2008.10.10 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1572 - 2008 ඔක්තෝබර් 17 වැනි සිකුරාදා - 2008.10.17

*1572 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1154 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1157 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, ஒற்றோபர் 24 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, ஒற்றோபர் 10 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பாராளுமன்றம்

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாற்றொகுதியில் நிலவும் பின்வரும் பதவிகளுக்கு சிறந்த உடல் நலமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் இறுதியில் காணப்படும் மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2008.11.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

1. (அ) ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்)
(ஆ) ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்)
(இ) ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்)

1.1 சம்பள அளவுத்திட்டம்.- ஆண்டொன்றுக்கு ரூபா 2,71,020- 3 X 3,900/13 X 4,800- ரூபா 3,45,120 ஆகும். (இந்த சம்பள அளவுத்திட்டத்தின் கீழ் கொடுப்பனவுகள் அடங்கலாக கிடைக்கக்கூடிய ஆகக்குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 39,700 ஆக இருக்கும்.)

ஹன்சாட் அறிக்கையாளராக 10 வருட திருப்திகரமான சேவைக் காலமொன்றைப் பூர்த்திசெய்திருக்கும் ஒருவர் சிரேட்ட ஹன்சாட் அறிக்கையாளர் பதவிக்கு பதவி உயர்த்தப்படுவதற்குத் தகைமை பெறுவார் என்பதுடன் அவர் ரூபா 2,98,440-5 X 7,740/8 X 9,480- ரூபா 4,12,980 வருடாந்த சம்பள அளவுத் திட்டத்திலும் அமர்த்தப்படுவார். (இச்சம்பள அளவுத்திட்டத்தின்கீழ் கொடுப்பனவுகளுடன் ஆகக்குறைந்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 46,600 ஆக இருக்கும்.)

1.2 வயதெல்லை.- 2008.11.10 ஆந் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்க கூட்டுத்தாபனங்களில்/ நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தொடர்பில் இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைத்தாகாது).

1.3 கல்வித் தகைமைகள் :

(அ) சிங்கள ஹன்சாட் அறிக்கையாளர் சிங்கள மொழியில் திறமைச் சித்தியுடனும், தமிழ் ஹன்சாட் அறிக்கை யாளர் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடனும், ஆங்கில ஹன்சாட் அறிக்கையாளர் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடனும் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களுக்கு குறையாமல் சித்தியடைந்திருத்தல் ;

அல்லது

(ஆ) சிங்கள ஹன்சாட் அறிக்கையாளர் சிங்கள மொழியில் திறமைச் சித்தியுடனும், தமிழ் ஹன்சாட் அறிக்கை யாளர் தமிழ் மொழியில் திறமைச் சித்தியுடனும், ஆங்கில ஹன்சாட் அறிக்கையாளர் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடனும் ஒரே அமர்வில் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் கணிதம் உட்பட எட்டு பாடங்களுக்கு குறையாமல் சித்தியடைந் திருத்தல்.

1.4 தொழில்சார் தகைமைகள் :

1.4.1 ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்) :

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் ;
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள்.

(ஆ) சிங்கள மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) ஆங்கில, தமிழ் மொழி அறிவும் கணனி அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

1.4.2 ஹன்சாட் அறிக்கையாளர் (தமிழ்) :

(அ) சுருக்கெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 110 சொற்கள் ;
தட்டெழுத்து வேகம் - நிமிடம் ஒன்றுக்கு 30 சொற்கள்.

(ஆ) தமிழ் மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) ஆங்கில, சிங்கள மொழி அறிவும் கணனி அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

1.4.3 ஹன்சாட் அறிக்கையாளர் (ஆங்கிலம்) :

(அ) சுருக்கெழுத்து வேகம் (நிமிடம் ஒன்றுக்கு 120 சொற்கள்) ;
தட்டெழுத்து வேகம்) நிமிடம் ஒன்றுக்கு 40 சொற்கள்).

(ஆ) ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சியும் பரந்த பொது அறிவும் பெற்றிருத்தல்.

(இ) சிங்கள, தமிழ் மொழி அறிவும் கணனி அறிவும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

**குறிப்பு** : (i) ஆட்சேர்ப்பு தொடர்பான பரீட் சைகளில் ஹன்சாட் அறிக்கை யாளர் பதவிக்கு தெரிவுசெய் வதற்குத் தேவையான திறமை களைப் பெறத் தவறும் பட்சத் தில் விண்ணப்பதாரர்கள் குழு அறிக்கையாளர் பதவிக்கு அல்லது சுருக்கெழுத்தாளர்

பதவிக்கு நியமிக்க கருத்திற் கொள்ளப்படுவர். இந்த பதவிகளுக்கான ஆண்டு சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு :

குழு அறிக்கையாளர் (சிங்களம்)/ (தமிழ்)/ (ஆங்கிலம்) - ரூபா 2,47,620 - 9 x 3,900/6 x 4,800 - ரூபா 3,11,520.

சுருக்கெழுத்தாளர் (சிங்களம்)/ (தமிழ்)/ (ஆங்கிலம்) - ரூபா 1,82,880 - 3 x 1,680/10 x 2,220/4 x 3,480 - ரூபா 2,24,040.

(ii) ஆகவே ஹன்சாட் அறிக்கையாளர் (சிங்களம்)/ (தமிழ்)/ (ஆங்கிலம்) பதவி தொடர்பாக மட்டும் விண்ணப்பத்தை அனுப்பிவைப்பது போதுமானதாகக் கருதப்படும்.

1.5 *ஆட்சேர்ப்பு முறை.-* சுருக்கெழுத்து, தட்டெழுத்து, அறிக்கையிடல் மற்றும் மொழி பற்றிய எழுத்துப் பரீட்சைகள் மூலமும் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமும் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

1.6 *சேவையில் ஈடுபடுத்தும் நிபந்தனை.-* நியமனம் பெற்று ஒரு வருடத்தினுள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆங்கில மொழி மூல விண்ணப்பதாரிகள் 90% செவ்வையுடன் நிமிடம் ஒன்றுக்கு 140 ஆங்கில சொற்கள் சுருக்கெழுத்து வேகம் பற்றிய பரீட்சையொன்றில் சித்தியடைதல் வேண்டும். பரீட்சையில் சித்தியடையத் தவறும் சந்தர்ப்பத்தில், காலத்திற்கு ஏற்ற வகையில் அவர்களின் நியமனம் முடிவுறுத்தப்படுவதற்கோ அல்லது முன்பிருந்த சேவைக்கு அவர்கள் திருப்பி அனுப்பப்படுவதற்கோ உட்படலாம்.

**2. சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் முதலில் மூன்று வருட தகுதிகாண் காலமொன்றுக்கு உட்பட்ட அடிப்படையில் வழங்கப்படும். அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர ஓய்வூதியத்திற்கு உரித்துடைய சேவைகளில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள யாரேனுமொருவர் தெரிவுசெய்யப்பட்டால் அவர் ஒரு வருட பதில் கடமை காலமொன்றுக்கு அமைய நியமிக்கப்படுவார்.

(ii) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாற்றொகுதிக்கு ஏற்புடைத்தான நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுக வேண்டும்.

(iii) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் அநாதைகள், விதவைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்திலான தொகையொன்றைப் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

(iv) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மருத்துவப் பரிசோதனை ஒன்றுக்கு உட்படுத்தப்படுவர்.

(v) தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கை ஒன்று பெற்றுக்கொள்ளப்படும்.

3. விண்ணப்பதாரிகள் பின்வரும் சான்றிதழ்களின் (மூலப்பிரதிகளல்ல) பிரதிகளை தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரம் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை விண்ணப்பதாரிகள் சமர்ப்பிக்க வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ் ;
(இ) தொழில்சார் தகைமைகள் பற்றிய சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
(உ) அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரு நற்சான்றிதழ்கள்.

(ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் நற்சான்றிதழ்களை அனுப்பத் தேவையில்லை).

4. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

5. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளைப் பிரயோகிப்பது பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

6. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் திணைக்களத் தலைவர் ஊடாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2008.10.17.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைப் பாராளுமன்றம்**

ஹன்சாட் அறிக்கையாளர் (....................................) பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ----.
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் :----.

2. (அ) தனிப்பட்ட முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.
(ஆ) அலுவலக முகவரி :----.
தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :-
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்.)

(ii) 2008.11.10 ஆந் திகதி ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

4. விவாகமானவரா/விவாகமாகாதவரா ? :----.

5. பால் (ஆண்/பெண்) :----.

6. இலங்கைப் பிரசையா எனும் விபரம் :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. கல்வித் தகைமைகள் :
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

| சித்தியடைந்த பரீட்சையும் ஆண்டும் | பாடம் | பெற்ற சித்திகள் |
|---|---|---|
| | | |

9. உயர் கல்வித் தகைமைகள் :
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

(1) பட்டமும் பெற்ற ஆண்டும் :----.
(2) பல்கலைக்கழகம் :----.

10. (அ) சுருக்கெழுத்து வேகம் :----.
(ஆ) தட்டெழுத்து வேகம் :----.

11. தொழில்சார் தகைமைகள் :-
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
----.
----.

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம் :-

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் :----.
(ஆ) தற்போது வகிக்கும் பதவி :----.
அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
(இ) வருடாந்த திரட்டிய சம்பள அளவுத்திட்டம் :----.
(ஈ) மாதாந்த திரட்டிய சம்பளம் :----.
(உ) படிகள் :----.

13. நீர் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? அவ்வாறாயின் விபரங்களைக் குறிப்பிடுக :----.

14. நீர் இதற்கு முன்னர் அரசாங்க சேவையில் பணியாற்றியுள்ளீரா ? :----.
அவ்வாறாயின் விபரங்களையும் சேவையிலிருந்து விலகுவதற்கான காரணங்களையும் குறிப்பிடுக :----.

15. பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் (மூலப் பிரதிகளல்ல) இணைக்கப்பட்டுள்ளன :

**கவனிக்குக**.- இச்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) கல்விச் சான்றிதழ்கள் ;
(இ) தொழில்சார் சான்றிதழ்கள் ;
(ஈ) அனுபவம் பற்றிய சான்றிதழ்கள் ;
(உ) விண்ணப்பதாரியின் ஒழுக்கம் தொடர்பில் அண்மையில் பெறப்பட்ட இரு நற்சான்றுப் பத்திரங்கள்.
(ஏற்கனவே அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/ அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/ நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் ஒழுக்க நற்சான்றுப் பத்திரங்களின் பிரதிகளை அனுப்ப அவசியமில்லை.)

**விண்ணப்பதாரியின் கூற்று :**

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் உறுதிமொழிகின்றேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை என நான் தெரிவுசெய்யப்பட முன்னர் கண்டுபிடிக்கப் பட்டால் இப்பதவிக்கு நான் தகுதியற்றவனாவேன் என்பதையும் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படு வேன் என்பதையும் நன்கறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**திணைக்கள/நிறுவனத் தலைவரின் சான்றிதழ்**
(அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்கட்கு,

இந்நிறுவனத்தில் ................................................ பதவியை வகிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................... அவர்களின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவரது ஒழுக்க நடத்தை திருப்திகரமானது எனவும், ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால், சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார்/விடுவிக்கப்படமாட்டார்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரை).

திகதி :----.

10-444

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

### கணக்காய்வு பரீட்சகர் சேவையில் கணக்காய்வு பரீட்சகர் தரம் II இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2008

கணக்காய்வு பரீட்சகர் சேவையின் சேவைக் குறிப்பு 06 (ii) (ஆ) பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அச் சேவையின் II ஆம் தரத்திற்கான ஆட்களைத் தெரிவு செய்வதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் ஒரு திறந்த போட்டிப் பரீட்சை நடாத்தப்படும். இந்த அறிவுறுத்தலில் குறித்துரைக்கப்பட்டவாறு தேவையான தகைமைகளைக் கொண்டிருக்கும் பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பரீட்சைத் திகதி**.– 2008 நவம்பர் மாதத்தில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் இந்த பரீட்சை நடாத்தப்படும். இந்த பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்து செய்வதற்கோ அரசாங்க சேவை ஆணைக்குழு அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

2. **நியமனத்திற்கான ஆட்களின் எண்ணிக்கையும் நியமனம் அமுலாக்கும் திகதி**.– நியமனம் அமுலாக்கும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவால் தீர்மானிக்கப்படும். குறித்த சில எண்ணிக்கையான வெற்றிடங்களையோ அல்லது சகல வெற்றிடங்களையுமோ நிரப்பாது விடுவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

3. **சேவை நிபந்தனைகள்** :

(i) அரசாங்க வர்த்தமானியின் பகுதி I இன் (II ஆ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களை கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகள், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1985 திசெம்பர் 20 ஆந் திகதிய 380/61 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கணக்காய்வு பரீட்சகர் சேவையின் குறிப்பில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள் மற்றும் சொல்லப்பட்ட அந்த குறிப்பிற்கு செய்யப்பட்ட அல்லது இதன் பின்னர் செய்யப்படவுள்ள ஏதாவது என்பவற்றுக்கிணங்க தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகள் கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II இற்கு நியமனம் செய்யப்படுவர்.

(ii) இந்த பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமாகும். இந்நியமனம் பெற்ற திகதியிலிருந்து மாதாந்த உழைப்பின் ஏழு சதவீதம் (7%) விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்துவதற்கு நீங்கள் வேண்டப்படுகின்றீர்கள்.

(iii) சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமனத் திகதியிலிருந்து மூன்று ஆண்டுகள் கொண்ட காலப்பகுதிக்கு தகுதிகாண் சேவையில் நியமிக்கப்படுவர்.

(iv) இந்த பரீட்சையை பூர்த்தி செய்த மற்றும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் தகுதிகாண் காலப்பகுதியின் முடிவில் பதவியில் உறுதிப்படுத்தப்படுவர் ஏனைய காரணிகளுடன் இந்த உறுதிப்படுத்தல்கள் பின்வருவனவற்றிலும் தங்கியுள்ளது :

(அ) கடமைகள், வருகை மற்றும் பழக்க வழக்கங்களின் திருப்திகரத்தன்மை

(ஆ) தகுதிகாண் காலப்பகுதி முடிவடைவதற்கு முன் வினைத்திறமைக்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைதல்.

(v) தகுதிகாண் காலப்பகுதியின் இறுதியின் பதவியில் உறுதிப்படுத்தப்படுவதற்கு தவறுமிடத்து அவருடைய சேவை நிறுத்தப்படும்.

4. **சம்பள அளவுத் திட்டம்**.– கணக்காய்வு பரீட்சகர் சேவையின் தரம் II தொடர்பான திரட்டிய சம்பள அளவுத்திட்டம் 06/2006 (iv) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாதாந்தம் ரூபா 16,720 – 10 X 320 – 11 X 365 – 15 X 450 - ரூபா 30, 685 ஆகும். (ரூபா 17,680 இற்கு முன்னர் வினைத்திறமை காண்தடை)

5. **சுகாதாரமும் ஒழுக்கமும்**.– பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்க பண்பும் அவன்/அவள் உடையவரென்று பொதுச் சேவை ஆணைக்குழு திருப்தியடைய வேண்டும். பரீட்சார்த்தி தீவின் எந்த பாகத்திலும் சேவையாற்றுவதற்கான நல்ல உடல் பலமும் சிறந்த கண் பார்வையும் பொருத்தமான உடல் ஆரோக்கியமும் கொண்டிருக்க வேண்டும். அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் ஏற்கனவே இல்லாத பரீட்சார்த்தி ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அவன்/அவள் ஒரு மருத்துவ பரிசோதனைக்கு தோற்ற வேண்டும்.

6. **தகைமைகள்**.– எல்லா பரீட்சார்த்திகளும்,

(அ) இலங்கை பிரசையாக இருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் ஏற்கப்படும், இறுதித் திகதியில் அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் அற்ற விண்ணப்பதாரிகளிடம் 22 வயதிற்கு குறையாதவராகவும் 32 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் ஏற்கனவே உள்ள ஆட்களுக்கு 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி நல்ல உடலாரோக்கியமும் சிறந்த ஒழுக்க பண்பும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) பின்வரும் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி அல்லது இதற்கு ஒப்பான தகைமை

அல்லது

(ii) இலங்கை பட்டயக் கணக்கீட்டு நிறுவகத்தின் லைசன்சியேட் அல்லது இன்டமீடியட் பரீட்சை சித்தியடைந்திருத்தல்

(iii) இலங்கை தொழிநுட்ப கல்லூரி/ இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தின் உயர் தேசிய கணக்கியல் அல்லது வணிக டிப்ளோமாவில் சித்தி பெற்றிருத்தல்.

(உ) ஏதேனும் சமய மதகுரு எவரும் இப் பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு**.– இப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது கல்வி மற்றும் திறன் தொழிற் தகைமைகள் தொடர்பான சான்றிதழ்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கோரப்பட்டவுடன் சமர்ப்பிப்பதற்காக ஆயத்தத்துடன் இருத்தல் வேண்டும். பரீட்சை முடிவுகளை எதிர்பார்த்து விண்ணப்பிக்க முடியாது.

**குறிப்பு :**

(i) சித்தியடைவதற்கென தேவைப்படுத்தப்பட்ட சகல பரீட்சை அல்லது பரீட்சைகளில் 2008.11.07 அன்று சகல விதத்திலும் சித்தி பெறுதலுடன் பூரணப்படுத்தப்படுத்தி இருப்பின் அத்துடன்

(ii) தகைமைகளுக்கான உத்தியோகபூர்வ சான்றிதழ்கள் அல்லது அச்சான்றிதழ்களுக்கான அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஏதாவது உத்தியோக பூர்வ ஆவணமொன்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப் பித்தால் மாத்திரமே பரீட்சார்த்தி தகைமை பெற்றவராகக் கருதப்படுவார்.

7. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமானது ரூபா 300 ஆகும். இதற்கான கட்டணம் வருமானத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு செலவு வைக்கப்படும் அறிவுறுத்தலுடன் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப் படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மையில் உள்ள பிரதேச செயலகத்திற்கு செலுத்தப்பட வேண்டும். பிரதேச செயலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுசீட்டு தமது விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். இப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் எக் காரணத்திற்காகவும் முழு அளவிலோ அல்லது பகுதியளவிலோ மீளச் செலுத்தப்பட மாட்டாது. (பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டின் போட்டோ பிரதி ஒன்று உங்கள் வசம் வைத்திருப்பது உகந்ததாகும்.)

8. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) விண்ணப்பம் இந்த அறிவுறுத்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரிப் படிவத்தின் படி தாளின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி ஏ 4 அளவு தாளில் தயாரித்து பரீட்சார்த்தியால் சொந்த கையெழுத்தில் நிரப்பப்பட வேண்டும். 01 முதல் 02 வரை முதலாம் பக்கத்திலும் 03 முதல் 05 (i) வரை இரண்டாம் பக்கத்திலும் 5 (ii) முதல் 09 வரை மூன்றாம் பக்கத்திலும் 10 முதல் 12 வரை நான்காம் பக்கத்திலும் அமைந்திருக்க வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெற்ற மொழியில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். (12 ஆம் பந்தியை பார்க்க)

(இ) திறந்த போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் 2008. 11.07 அன்று அல்லது அதற்கு முன்னர் பெறக்கூடிய வகையில் "பத்தரமுல்லை, பெலவத்தை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்" இற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கணக்காய்வுப் பரீட்சகர் தரம் II பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008" என்று தெளிவான எழுத்தில் எழுதப்பட வேண்டும். முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தங்களது விண்ணப்பத்தை தமது திணைக்கள தலைவர்/நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

(ஈ) ஒவ்வொரு விடயத்திலும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் தொலைந்துபோனது அல்லது தாமதமடைந்துவிட்டது என்ற முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது, மேலும், பரீட்சார்த்திக்கு அனுமதி அட்டை வழங்குவது பரீட்சைக்கு அமர்த்தப்படுவதற்கான தகைமையாக அமையாது. இவ்வாறு அனுமதிக்கப்படுவது பின்னர் அவசியமான ஆய்வுகளுக்கு உட்பட்டதாகும்.

(உ) விண்ணப்பம் கிடைக்கப்பெற்று பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டதும், புதினத் தாள்களில் அது பற்றிய அறிவித்தல் கொடுக்கப்படும். இந்த அனுமதி அட்டையை பரீட்சைத் திகதிக்கு ஆகக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளாத விண்ணப்பதாரர் ஒருவர் பின்வரும் விபரங்களுடன் "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சை திணைக்களம், பலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும். (தந்தி முகவரி : "பரீட்சைகள்" கொழும்பு .)

(i) பரீட்சையின் பெயர் :
(ii) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் ;
(iii) முகவரி ;
(iv) விண்ணப்பம் அனுப்பப்பட்ட திகதி, பதிவு இலக்கம் மற்றும் தபால் அலுவலகம் மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரி யாயின் தமது விண்ணப்பத்தின் போட்டோப் பிரதி மற்றும் அரச பகுதி விண்ணப்பதாரியாயின் தமது திணைக்களத் தலைவரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் போட்டோப் பிரதி
(v) பணம் செலுத்தப்பட்ட பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதி

(ஊ) அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் விண்ணப்பதாரரின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது கையொப்பங்களை தமது திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். ஏனைய விண்ணப்பதாரர்களின் கையொப்பம், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையொன்றில் அதிபர், மாதாந்த ரூபா 20,030 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர், புத்தகோயில் ஒன்றின் பிரதம குரு அல்லது உயர் ஸ்தானத்தில் உள்ள குரு, ஏனைய வேறு மதத்தைச் சார்ந்த வணக்க ஸ்தலத்துக்குப் பொறுப்பாக இருக்கும் அல்லது அத்தகைய வணக்க ஸ்தலங்களில் முக்கிய பதவி வகிக்கும் குரு, முப்படைகளில் ஆணை பெற்ற அலுவலர் ஒருவர் அரச சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியில் உள்ள அலுவலர் ஒருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. **பரீட்சைக்கு அனுமதி**.- (அ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்ற ஒவ்வொருவருக்கும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டையொன்று அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுகின்ற ஒவ்வொருவரும் இந்த அனுமதி அட்டையை பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையை சமர்ப்பிக்கத் தவறுகின்ற பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்படமாட்டாது.

(ஆ) பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எழுதுதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாளன்றே தமது அனுமதி அட்டையை மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். சகல பரீட்சார்த்தி களாலும் பின்பற்றப்பட வேண்டிய விதிகளின் கோவையொன்று இந்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

(இ) பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டையொன்று வழங்கப்படுவது, அவருக்கு பரீட்சை எடுப்பதற்கு தேவையான தகைமைகள் உண்டென ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படமாட்டாது.

(ஈ) பரீட்சைகள் நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் விதிக்கப்படும் விதிகளுக்கு இணங்க நடப்பதற்கு பரீட்சார்த்திகள் பணிக்கப்படுகின்றனர். இவ்விதிகளில் எவற்றையும் மீறுகின்ற பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தால் அவரின் தற்றுணியின் பேரில் தண்டனைக்கு ஆளாகலாம்.

10. **பரீட்சார்த்தி ஒருவரை அடையாளங் காணல்**.- பரீட்சார்த்தி ஒருவர் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும், பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தமது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்த நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ஆ) குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தால் வழங்கப்பட்ட பரீட்சைத் தினத்திற்கு முன் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத திகதியில் வழங்கப்பட்ட வலிதுடைய கடவுச் சீட்டு ;

(இ) தபால் மா அதிபரால் விநியோகிக்கப்பட்ட வலிதுடைய அடையாள அட்டை.

11. **பொய்யான தகவல் தருதல்**.- பரீட்சார்த்தி ஒருவர் தகவுடையவர் அல்லர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்கு பின்னர் எந்தக் கட்டத்திலும் அவருடைய பரீட்சார்த்தித் தகைமை இரத்து செய்யப்படும். பரீட்சார்த்தி ஒருவரால் தரப்பட்ட விபரங்கள் அவருடைய அறிவுக்கு எட்டியவரை பொய் எனக் காணப்பட்டால் அல்லது அவர் முக்கிய விடயமொன்றை வேண்டுமென்றே மறைத்து விட்டார் எனக் காணப்பட்டால், அவர் சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

12. **பரீட்சைத் திட்டம்** :

(அ) பரீட்சை தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும்.

(ஆ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் தகைமை பெற்ற மொழியில் அல்லது அரச கரும மொழியில் பரீட்சை எழுதுதல் வேண்டும்.

(இ) பரீட்சார்த்தி ஒருவர், அவர் தகைமை பெற்ற பரீட்சையின் பாடங்களை இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அவர் அப்பரீட்சையில் பெரும்பான்மையான பாடங்களில் எம் மொழியில் சித்தியடைந்துள்ளாரோ அம்மொழியில் அல்லது அரச கரும மொழியில் எழுதுதல் வேண்டும்.

(ஈ) பிரதான பாடத்தை ஒரு மொழியிலும், துனணப்பாடத்தை இன்னொரு மொழியிலும் தோற்றி சித்தி அடைந்த சிறப்புப் பட்டம் பெற்ற பரீட்சார்த்தி ஒருவர், அவர் பிரதான பாடத்தை எம் மொழியில் எடுத்திருந்தாரோ அம் மொழியில் அல்லது அரச கரும மொழியில் இப்பரீட்சையை எடுத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- (i) மேலே (அ) மற்றும் (இ) யில் 'தகைமை பெற்ற' பரீட்சை என்ற சொற்றொடர் மேலே 06 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைகளில் ஒன்றாகும்.

(ii) பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சையின் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளித்தல் வேண்டும்.

(iii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழியை மாற்றுவதற்கு பரீட்சார்த்திக்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. **பரீட்சை முறை** :

(அ) பின்வரும் ஐந்து பாடங்களுக்கு நடாத்தப்படும் எழுத்துமூல பரீட்சையும் ஒரு வாய்மொழிப் பரீட்சையும் உண்டு :-

(1) கணக்கியல் - 03 மணித்தியாலங்கள் 150 புள்ளிகள்
(2) கிரயக் கணக்கியல் - 02 மணித்தியாலங்கள் 100 புள்ளிகள்
(3) கணக்காய்வு – 03 மணித்தியாலங்கள் 150 புள்ளிகள்
(4) வர்த்தக கணிதமும் புள்ளிவிபரவியலும் - 02 மணித்தியாலங்கள் 100 புள்ளிகள்
(5) சுற்றாடலியல் - 1 ஆம் பகுதி – பொருளியல் - 01 மணித்தியாலங்கள் 50 புள்ளிகள்

2 ஆம் பகுதி – பொது வர்த்தக அறிவு - 01 மணித்தியாலங்கள் 50 புள்ளிகள்
3 ஆம் பகுதி – வணிக சட்டம் - 01 மணித்தியாலங்கள் 50 புள்ளிகள்

எழுத்துப்பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்னிணைப்பு "அ" இல் தரப்பட்டுள்ளது.

(ஆ) எழுத்துப் பரீட்சையில் ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தது 40 சதவீத புள்ளிகளையும் மொத்தப் பரீட்சையின் ஆகக் குறைந்தது 50 சதவீத சராசரி புள்ளியையும் பெறும் பரீட்சார்த்திகள் மட்டுமே நேர்முக பரீட்சைக்கு தோற்றத் தகுதி பெறுவதுடன் இப் பரீட்சைக்கு பின்னர் அறிவிக்கப்பட்ட ஒரு திகதியில் நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சை பரீட்சார்த்திகளின் தகைமைகள், சான்றிதழ்கள் மற்றும் சேவைப் பதிவேடுகள் பரீட்சிக்கப்படுவதற்கு மாத்திரமே யானதுடன் நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. நேர்முகப் பரீட்சைக் குழு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

14. **நியமனத்திற்கு தெரிவு செய்யும் நடைமுறை**.- எழுத்துப் பரீட்சையில் 05 வினாத்தாள்களுக்காகவும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகை மற்றும் நேர்முகப்பரீட்சை புள்ளிகளைச் சேர்ந்த கூட்டுத்தொகையின் ஆகக் கூடிய புள்ளிகளைப்பெறும் பரீட்சார்த்திகள் தெரிவு செய்யப்படுவார்கள். பல பரீட்சார்த்திகள் ஒரே அளவு புள்ளிகளைப் பெற்றிருத்தல் தெரிவுசெய்வதற்கான இறுதி முடிவு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும்.

15. மேற்படி பிரமாணங்களில் மேவப்படாத விடயங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி

எஸ். ஸ்வர்ணஜோதி,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2008, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி.

பின்னிணைப்பு 'அ'

**எழுத்துப் பரீட்சையின் பாடத்திட்டம்**

(i) ***கணக்கியல்*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலயங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்)

* கணக்கியல் கோட்பாடு – அடிப்படை எடுகோள்கள் மற்றும் தத்துவங்கள். சொத்து மதிப்பீட்டு முறைமைகள், இரட்டைப் பதிவுக் கோட்பாடு, கிரயத்தின் வகைகள், ஐந்தொகையின் தகவல்களை வகைப்படுத்தல் மற்றும் உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்குள் என்பவற்றின் பொதுவான புரிந்துணர்வு

* கணக்கியல் நடைமுறை – ஒரு கணக்கீட்டு உரிமத்தில் பயன்படுத்தப்படும் வளங்களில் மாற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுபாட்டுக் கோட்பாடு, நியமங்களுடன் ஒப்பிடுவதற்கான தேவை, வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களின் பகுப்பாய்வு, கொள்வனவு விற்பனை, பணத்தின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு, பதிவேட்டுப் பொருட் கட்டுப்பாடு முதலிய வாறான அடிப்படை முகாமைத்துவ செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நடைமுறைகளை நன்கு தெரிந்திருத்தல், கணக்கறிக்கைகள், நாட்பதிவுப் புத்தகங்கள், பேரேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியவற்றின் வித்தியாசமான வடிவமைப்புக்களைத் தெரிந்திருத்தல் என்பனவற்றின் புரிந்துணர்வு

* ஐந்தொகை, உற்பத்தி, வியாபார இலாப நட்டக் கணக்குகள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள் முதலியன ; கணக்கீடு மற்றும், புள்ளி விபர விகிதங்கள் என்பவற்றைத் தயாரிப்பது உட்பட கணக்கியல் நடைமுறைச் சிக்கல்கள்

(ii) ***கிரயக் கணக்கியல்*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக இரண்டு மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்) கிரயவியல் தத்துவங்கள், கிரயவியல் வகைகள், கொள்வனவு மற்றும் களஞ்சிய நடைமுறை, பொருட்கள், பொருட்களை விலை குறைத்தல், பொருள் வழங்கலின் விலை குறித்தல், கூலிகள், மேந்தலைகள், நிலையான மற்றும் மாறும் செலவுகள், நேர் மற்றும் நேரில் செலவுகள், பாதீட்டுக் கட்டுப்பாடு. நியமக் கிரயவியல், முரண்கள், எல்லைக் கிரயவியல், ஒப்பந்தக் கிரயவியல் செயல்முறை கிரயவியல், துண்டு வேலைக் கிரயவியல், போக்குவரத்துக் கிரயவியல், வெளியீட்டுக் கிரயவியல் என்பவற்றின் கொள்கைகள்.

(iii) ***கணக்காய்வு*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்)

* கணக்காய்வு எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் - கணக்காய்விற்கான தேவை, கணக்காய்விற்கான அடிப்படையாக கணக்களிதகைமை, கணக்காய்வின் நோக்கெல்லை, கணக்காய்வு வகைகள், கணக்காய்வுக் காலம், கணக்காய்வாளர்களின் தகைமைகள், அதிகாரங்கள், கணக்காய்விற்கான அதிகாரம், முன் கணக்காய்வு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கட்டுப்பாடு, ஆழக் கணக்காய்வு, உள்ளகக் கணக்காய்வு, நியமங்களிற்கான தேவை, சான்றுகளின் வகைகள், கணக்காய்வு தொழில்நுட்பங்கள் என்பன

* கணக்காய்வு முறைமைகளும் நடைமுறையும் - பிரதான ஐந்தொகை, உற்பத்தி வியாபார, இலாப நட்டக் கணக்கு விடயங்கள், காணி, கட்டிடங்கள், நிலையான சொத்துக்கள், பதிவேட்டுப் பொருட்கள், பணச்சொத்துக்கள், விற்பனைகள், கொள்வனவுகள், பெறுகைகள், கொடுப்பனவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்களைத் தெரிந்திருத்தல்.

* கணக்காய்வுச் சிக்கல்கள் - அவதானிப்புத் திறைமையைப் பரீட்சிப்பதற்கான இலகுவான சிக்கல்கள், வழுக்களையும், அசாதாரண நிலைமைகளையும் கண்டுபிடிக்கும் புத்தி சாதுரியம்

* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் செயற்பாடுகள்

(iv) ***வர்த்தக கணிதமும் புள்ளிவிபரவியலும்*** - வர்த்தக கணிதமும் புள்ளிவிபரவியல் தொடர்பான இரண்டு மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (100 புள்ளிகள்)

**கணிதம் :**

* சமன்பாடுகள் - வரைப்படத் தீர்வுகள் உட்பட ஒருபடி மற்றும் இருபடிச் சமன் பாடுகள்

* தொடர்கள் எண்கணிதம் மற்றும் கேத்திர கணிதம் கழிவிடுதல் உட்பட சாதாரண வட்டியும் கூட்டு வட்டியும்

* வரிசை மாற்ற ஒழுங்கமைவுகளும் சேர்வைகளும் உட்பட மூலாதார நிகழ்தகவுக் கோட்பாடு

**புள்ளிவிபரவியல் :**

* தரவுகளின் சேகரிப்பு, சமர்ப்பித்தல் மற்றும் பொருளுரைத்தல்

* அடுக்கு நிகழ்வுப் பகிர்வுகளின் பகுப்பாய்வு சராசரிகளும், மதிப்புச் சிதறலும், நியம வேறுபாடு, அடுக்கு நிகழ்வு வளைகோடுகள்.

* நிகழ்தகவு பகிர்வும் அதன் பிரயோகமும்

* மாதிரித் தெரிவும் மாதிரிப் பகிர்வீடுகளின் முக்கியத்துவ மான கோட்பாடுகளும், நியம வழு, மாதிரித் தெரிவுமுறைகள், முக்கியத்துவத்தை அறிவதற்கான பரீட்சைகள்.

* காலத் தொடர்கள் - காலத்தொடரொன்றின் உறுப்புக்கள், போக்குகள் பருவ, சுழல் வட்ட மற்றும் ஒழுங்கற்ற முறைகள்

* குறிவரைத் தொடர்புகள், புள்ளி விபரக் குறிவரைவு அட்டவணைகள்

(v) ***சுற்றாடலியல்*** - பின்வரும் விடயங்கள் தொடர்பாக மூன்று மணித்தியாலங்களிலான ஒரு வினாத்தாள் (150 புள்ளிகள்) பொருளியல், சட்டம் மற்றும் பொது வர்த்தக அறிவின் அடிப்படை தத்துவங்கள் பொருளியல்

* பொருளியல் கற்கையின் தன்மையும், முக்கியத்துவம், விலைப்பொறிமுறை, கேள்வியும் வழங்கலும், கிரயமும் வருவாயும், இலாபத்தை உச்சப்படுத்தல், உற்பத்திக் காரணிகள், போட்டியும் தனியுரிமையும்

* இலங்கைப் பொருளாதாரத்தின் குணாம்சங்கள், தேசிய வருமானம், மொத்த தேசிய உற்பத்தி, அந்நியச் செலாவணி மீதி, பணவீக்கம், பொருளாதார மந்தம், நிலையான மற்றும் மிதக்கும் செலாவணி வீதங்கள், மதிப்பிறக்கம் என்பன.

* பணமும் வங்கியலும் - பணத்தின் தன்மை, பணத்தின் உருவாக்கமும் செயற்பாடுகளும், பணத்தின் பெறுமதி விலைகளின் பொது மட்டம், இலங்கை மத்திய வங்கியின் செயற்பாடுகள், வர்த்தக வங்கிகள், கடன் மற்றும் சேமிப்பு நிறுவனங்கள்.

**சட்டம் :**

* இலங்கையில் உள்ள பலவித சட்டமுறைகளின் வரையறை பற்றிய வரலாற்றுச் சுருக்கக் குறிப்பும், பொதுவான அவற்றின் செயன்முறையும், நீதிமன்றங்கள், தொழில் முறையீட்டு மன்றங்கள், கைத்தொழில் நீதிமன்றங்கள் ஆகியவற்றின் அமைப்பும் பணிகளும், நீதிபதிகளினதும், இலங்கை நீதி பரிபாலனத்தில் ஈடுபட்டுள்ள பிற முக்கிய சட்ட உத்தியோகத்தர்களினதும் பணிகள்.

* ஒப்பந்த இயல்பு.- இயற்கையான மற்றும் சட்ட ரீதியான ஆள் ; முகவராண்மை, வலுவுகந்த நிலைபற்றிய விளக்கக் கோட்பாடு.

**பொது வர்த்தக அறிவு :**

* முறைமைகள் நடைமுறைகள் உட்பட அலுவலக அமைப்பு கோவைப்படுத்தலும், தொகுத்து அட்டவணைப்படுத்தலும், அலுவலக சாதனங்கள், கூட்டங்களின் அமைப்பு, கூட்ட நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அறிக்கைகள் எழுதுதல்

* அமைப்புக் கட்டமைவு, அமைப்பு அட்டவணை, பணி வரிசை பதவியினர் உறவு, ஒருமுகப்படுத்துதல், பன்முகப்படுத்துதல், தனி வியாபாரம், பங்குடமை, கூட்டுப் பங்கு முதற் கம்பனிகள், கூட்டுறவு அமைப்பு, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியன உட்பட வியாபார அலகுகள்

* காப்புறுதிக் கோட்பாடுகளும் வகைகளும், இலங்கை ஏற்றுமதி கடன் கூட்டுத்தாபனம்

* கடல், தரை, ஆகாய மார்க்கப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான கப்பற் கேள்வு, தாமதக் கட்டணம்

* கைமாறத்தக்க ஆவணங்கள், கைமாறல் என்பதன் அர்த்தம், காசோலைகள், நாணயமாற்று உண்டியல்கள், புறக் குறிப்புக்கள், குறுக்குக் கோடிடல், ஏற்றுக்கொள்ளல், மறுத்தல்

* இலங்கையில் கூட்டுறவு அமைப்புக்களின் பங்கு

* முதலீட்டு கோட்பாடுகள் ; இலங்கையில் பங்குப் பரிவர்த்தனை

* விற்பனை ஒப்பந்தத்தை உள்ளடக்கிய பொருட்களின் விற்பனை, சொத்துக்களின் உரித்துடைமை மாறிச் செல்லல், நிபந்தனைகளும் பற்றாணைகளும், வாடகைக் கொள்வனவு, தவணைக் கட்டண அடிப்படையில் கொள்வனவு

* நடைமுறைகள், ஆவணங்கள், ஏற்றுமதி இறக்குமதி முறைகள், கொடுப்பனவு முறைகளும் நியதிகளும், சுங்க மற்றும் மதுவரித் தீர்வைகள் என்பன உட்பட சர்வதேச வர்த்தகம்

* தேசிய அபிவிருத்தி வங்கி, அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பவற்றின் பணிகள் உட்பட அபிவிருத்தி நிதி

சுட்டெண் [ ]

(அலுவலக பாவனைக்கு மட்டும்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கணக்காய்வு பரீட்சகர் சேவையில் II ஆம் தர கணக்காய்வு பரீட்சகர்களை தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2008**

(ஏ-4 பருமனான 02 கடதாசிகள், தலைப்பு இல. 01-02 வரை முதலாம் பக்கத்திலும், 03-05 (i) வரை இரண்டாம் பக்கத்திலும், 05 (ii) முதல் 09 வரை மூன்றாம் பக்கத்திலும் மிகுதி நான்காம் பக்கத்திலுமாகத் தயாரிக்கவும்.)

| நகரம் | | |
|---|---|---|
| 1. | கொழும்பு | |
| 2. | யாழ்ப்பாணம் | |

(வர்த்தமானி அறிவித்தலின்படி பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி விரும்பும் நகரத்தின் முன்னுள்ள கூட்டில் "x" குறிப்பிடவும்.)

[ ]

(பரீட்சையின் மொழி) (சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E) (கட்டத்தில் தொடர்பான ஆங்கில எழுத்தை எழுதவும்) (பரீட்சைக்குத் தோற்றுவதற்காக குறிப்பிட்ட மொழியை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

1. பெயர் :

   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்)
   உ-ம் : Mr. SILVA. S. A.

   1.2 முழுப்பெயர் :----.
   (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்)

   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

   1.4 தேசிய அடையாள அட்டை இல. :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :

   2.1 நிரந்தர முகவரி (அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும்) : ----.
   (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்)

   2.2 நிரந்தர முகவரி :----.
   (சிங்களத்தில்/தமிழில்)

   2.3 அலுவலக முகவரி :----.
   (ஆங்கில தனித்தனி எழுத்துக்களில்)

   2.4 அலுவலக முகவரி :----.
   (சிங்களத்தில்/தமிழில்)
   (அரச சேவை/மாகாண அரச சேவை ஆகியவற்றில் இருக்கும் அலுவலர்கள் அலுவலக முகவரியை வழங்க வேண்டும். ஏதாவது முகவரி மாற்றம் இருந்தால் உடனே அறிவிக்கப்படல் வேண்டும்).

3. இனத்தொகுதி :

(சிங்களவர் - 1, தமிழர் - 2,
இந்தியத் தமிழர் - 3, முஸ்லிம் - 4,
ஏனையோர் - 5)

(உரிய இலக்கத்தைக் கட்டத்தில் இடுக.)

4. 4.1 பால் (பெண்-F, ஆண்-M)

(உரிய எழுத்தை கட்டத்தில் இடுக.)

4.2 விவாக நிலை (விவாகமானவர்-M, தனியாள்-S) :----.

(உரிய எழுத்தை கட்டத்தில் இடுக.)

4.3 பிறந்த திகதி :

ஆண்டு □□□□ மாதம் □□ திகதி □□

4.4 2008.11.07 ஆந் திகதியில் வயது :

வருடங்கள் □□ மாதங்கள் □□ நாட்கள் □□

5. (i) இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

| பெறப்பட்ட தகைமை | தகைமை பெற்ற திகதி | விடயம் | பெறுபேறுகள் வழங்கப்பட்ட திகதி | தகைமை பெறப்பட்ட நிறுவகம் |
|---|---|---|---|---|
| | | | | |

(ii) கல்வி பொதுத் தராதர (சா. த.) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்கள் :

| பாடங்கள் | பெறப்பட்ட சித்திகள் |
|---|---|
| | |

6. மேலதிக கல்வி மற்றும் தொழிற்திறன் தகைமைகள் :----.

7. தமது நடத்தை மற்றும் இயலுமை பற்றி சான்றுறுதிப்படுத்தும் விண்ணப்பதாரி பெயரிடும் பிரதிநிதிகள் இருவரின் பெயர் மற்றும் முகவரி :

(i) ----.
(ii) ----.

8. அரச சேவை/மாகாண அரச சேவையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் இவற்றைப் பூர்த்தி செய்யவும் :

(i) நீங்கள் சார்ந்திருக்கும் சேவை/திணைக்களத் தரம் :----.

(ii) அச்சேவையில்/திணைக்களத் தரத்தில் நீங்கள் உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.

ஆண்டு □□□□ மாதம் □□ திகதி □□

9. பணப் பற்றுச்சீட்டு கழராதவாறு விண்ணப்பத்தில் ஒட்டவும்.

(i) இலக்கம் :----.

(ii) திகதி :----.

(iii) பணம் செலுத்திய நிலையம் :----.

(iv) செலுத்திய பணத்தொகை (ரூபா) :----.

(பணப்பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதி ஒன்றை தம்வசம் வைத்திருப்பது பின்தொடர் நடவடிக்கைகளுக்கு அவசியமானதாகும்.)

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் என்னுடைய நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை உண்மையானவை என்றும் பரீட்சைக் கட்டணத் துக்கான கொடுப்பனவாக ..................... ஆந் திகதியிடப்பட்ட ............................... இலக்கங்கொண்ட பற்றுச்சீட்டை இணைத்துள்ளேன் என்றும் பிரகடனப்படுத்துகின்றேன். மேலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட சட்டங்கள், விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் இப்பரீட்சை தொடர்பான நிபந்தனைகளின் பிரகாரம் நான் தகுதியற்றவன் எனக் காணுமிடத்து இப்பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் என்னுடைய பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச் செய்வதற்காக எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரரியின் கையொப்பத்தின் சான்றுறுதி** (வர்த்துமானி அறிவித்தலின் 08 (ஊ) ஆம் பந்தியைப் பார்க்கவும்.) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................................................... எனும் பெயருடைய விண்ணப்பதாரியை நான் தனிப்பட்ட ரீதியாக அறிந்தவர் எனவும் அவர், 2008 ........................ எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பமிடுபவரின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும்.

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

12. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**
(தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் கடமையாற்றுகின்ற திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகளுக்காக)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ........................................ எனும் பெயருடைய விண்ணப்பதாரி .................................... ஆந் திகதி முதல் இவ் அலுவலகத்தில் வேலை செய்கின்றார் என்றும், அவருடைய வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கின்றன என்றும் மேலே 01 மற்றும் 08 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் இவ் அலுவலகத்தில் உள்ள ஆவணங்களின் பிரகாரம் நான் தனிப்பட்ட ரீதியாகப் பரீட்சித்துப் பார்த்தேன் என்றும், அவை சரியானவை என்றும் 2008 ...................... ஆந் திகதி எனது முன்னிலையில் அவர் கையொப்பமிட்டார் என்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
(திணைக்களத் தலைவரின் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரின் கையொப்பம் (இறப்பர் முத்திரை மூலம் சான்றுறுதிப்படுத்தவும்).

சான்றுபடுத்துபவரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

10-534

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.